**டிசம்பர் - 13**

**"இவர்கள் மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும்." - அப் 7.60.**

எந்த விஷயத்தின் விளைவுகளும் நன்மையாகவே இருக்கின்றன என்று நாம் ஏற்றுக்கொண்டோமானால், எல்லா ஆவிக்குரிய இஸ்ரவேலருக்கும் இந்தப் படிப்பினையைக் கற்றுக்கொள்வது எவ்வளவு பெரிய ஆசிர்வாதமுள்ளதாயிருக்கும்! நாம் அந்த விளைவுகளுக்குட்பட தெய்வீக பராமரிப்பால் நடத்தப்பட்டிருந்தோம். என்று உணருவோமானால், அதற்கு தெய்வீக பராமரிப்பினால் கருவிகளாக உபயோகப்படுத்தப்பட்டவர்கள், இஷ்டமில்லாத போதகர்களாகவோ அல்லது யோசேப்பின் சகோதரரைப்போல, மெய்யாகவே எதிரான விளைவுகளை உத்தேசித்திருந்தார்கள் என்பது உண்மையாய் இருப்பினும், அவர்கள் சார்பில் நாம் மிகவும் உதாரமாகவும், மிகவும் அன்பாகவும் நினைக்கவும் உணரவும் வேண்டும். தங்களுடைய அன்றாட ஜீவியத்தில் பலிக்கிற காரியங்கள் பேரிலும், சத்தியங்கள் பேரிலும் இப்படிப்பட்ட அபிப்பிராயத்தைக் கொள்ள சாத்தியமாக்கப்படுகிறார்கள். அப்போஸ்தலன் சொல்கிறது போல, "கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் வெற்றி சிறக்கப்பண்ண" சாத்தியமாக்கப்படுகிறார்கள். இப்படிப்பட்டவர்களிடத்தில் சாத்தானுக்கு எதிராகவோ, அல்லது அவனுடைய எந்த ஊழியக்காரருக்கு எதிராகவோ, கசப்பையோ, அல்லது தூஷணத்தையோ வைத்துக் கொள்ள இடமிராது. **- Z 01, 331 (R 2895).**

ஒருவன் தன்னுடைய விரோதியை மன்னிக்கிறதுக்கு பரிசுத்த ஸ்தேவான் ஒரு சிறந்த உதாரணம். ஒருவருக்கு விரோதி எவருமே இல்லாதிருக்கும்போது, "நான் என்னுடைய விரோதிகளுக்கு மன்னிப்பேன்" என்று எண்ணுவதும் சொல்லுவதும் சுலபமான காரியம். நமக்கு விரோதமாகத்தவறு செய்திருக்கிறவர்களுக்கு எதிராக இருதயத்தில் கோபம் கொள்ளுவதைத் தவிர்ப்பது முழுதும் ஒரு வித்தியாசமான காரியமாயிருக்கிறது. அவர்கள் நமக்கு விரோதமாகத்தவறு செய்து கொண்டிருக்கிறார்கள் என்று அவர்களுக்கும் நமக்கும் தெரிந்திருக்கும்போது, அந்த ஜனங்களுக்கு எதிராக கோபத்தை மனதில் வைக்காமலிருப்பது இன்னமும் கடினமானது. அவர்கள் நமக்கு விரோதமாகத்தவறு செய்துகொண்டு இருக்கும்போதே, அவர்கள் சார்பாக நன்மையை விரும்புவதும் செய்வதும், இந்தக் காரியங்கள் எல்லாவற்றையும் விட மிகவும் கடினமானதாகும். இப்படிப்பட்ட குணத்தின் கம்பீரமான உச்சிக்கு பரிசுத்த ஸ்தேவான் ஏறினான். பாறைகளினாலும், கற்களினாலும், பலமாக அவன் அடிபட்டுக் கொண்டும் மிகவும் வேதனைப்பட்டுக் கொண்டும் இருக்கும்போது தன்னை உபாதிக்கிறவர்களுக்காக மன்னிப்புக் கேட்டு தேவனை நோக்கி ஜெபித்தான். அதைப் போலொத்த ஒரு குணத்தை நாம் அடைய வேண்டுமானால், நாம் மிகவும் தன்னை மறந்த நிலையிலும், சுத்தகுணமுள்ளவர்களாயும், ஆர்வமுள்ளவர்களாகவும், அன்புள்ளவர்களாயும், உண்மையுள்ளவர்களாயும் இருக்க வேண்டும். ஜீவியத்தின் சிறு காரியங்களில் அப்பியாசிக்கப்படுகிற இந்தத் தன்மைகள் படிப்படியாக நம்முடைய குணங்களுக்கு, நம்முடைய மிகவும் கடினமான அனுபவங்களுக்குச் சமமாக வேண்டியிருக்கிற பெலனைக் கொடுக்கின்றன. நம்முடைய அன்றாட சிறு சோதனைகளைச் சரியாய் எதிர்க்கத் தவறினோமானால், பெரிய நெருக்கடியில் தோல்வி அடைவோம். **- P 34, 175.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**மத் 5.40-48, 6.12,14,15, 18.21-35, லூக் 6.28, 23.34, ரோம 12.14,17,19,20. யாத் 23.4,5, நீதி 19.11, 24.17, பிர 7.21, மாற் 11.25, லூக் 6.35-37, 17.3-4, 1கொரி 4.12, எபே 4.32, கொலோ 3.13, பிலோமோன் 10, 1பேது 3.9.**

**கோபுர வாசிப்பு : Z 13, 185 (R 5259).**

**வினாக்கள் : இந்த வாரத்தில் நான் மன்னிக்கிறவனாயிருந்தேனா? எப்படி? ஏன்? உதவியாயிருந்ததும் இடையூறாயிருந்ததும் எவை? பலன் என்ன?**